**செய்தி வெளியீடு எண்: 355** **நாள்: 21.06.2019**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (21.6.2019) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறையின் கீழ் செயல்படும் நீர்வள ஆதாரத் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில், பருத்திப்பட்டு ஏரியின் சுற்றுச்சூழலை மீட்டெடுக்கும் பொருட்டு 28 கோடியே 16 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பருத்திப்பட்டு ஏரி பசுமை பூங்காவை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 189 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நீர்வள ஆதாரத் துறையின் சார்பில் முடிவுற்ற திட்டங்கள், அரசு அலுவலர்களுக்கான குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் விருந்தினர் மாளிகை ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், மக்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிடைக்கப்பெறும் நீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைக்கும் பொருட்டும், புதிய நீராதாரங்களை உருவாக்கிட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, நீர்வள ஆதாரத் துறை மூலமாக பல்வேறு பாசன மேம்பாட்டுத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டத்தில் உள்ள பருத்திப்பட்டு ஏரியின் சுற்றுச்சூழலை மீட்டெடுக்கும் பொருட்டு 28 கோடியே 16 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பருத்திப்பட்டு ஏரி பசுமை பூங்காவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். இப்பசுமை பூங்கா தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பூங்காவில், ஏரியை சுற்றிலும் 3 கிலோ மீட்டர் நீளத்திற்கு பொதுமக்கள் நடைபயிற்சி மேற்கொள்ள நடைபாதை, திறந்தவெளி அரங்கம், பார்வை மேடைகள், சிறுவர்கள் விளையாடிட விளையாட்டு உபகரணங்கள், வாகனங்கள் நிறுத்துமிடம், நிர்வாக மற்றும் சிற்றுண்டி கட்டடம், படகுகள் மூலம் ஏரியின் அழகை கண்டுகளிக்க படகு குழாம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இப்பசுமை பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், ஆட்ரம்பாக்கம் கிராமத்தின் அருகில் கொசஸ்தலையாற்றின் குறுக்கே 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், மாசிகம் கிராமத்தின் அருகில் மலட்டாற்றின் குறுக்கே 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிலத்தடி தடுப்புச் சுவர்; கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், வீரூர் மற்றும் பெரிய காட்டுப்பாளையம் ஓடைகளை 14 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து வலுப்படுத்தும் திட்டம் மற்றும் வீரூர் கிராமத்திலிருந்து தேவனாம்பட்டினம் வரை கெடிலம் ஆற்றினை 22 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து வலுப்படுத்தும் திட்டம்;

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் கிராமம் பெரியபள்ளம் ஓடையின் குறுக்கே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை; திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், கிளியூர் கிராமம், கல்லணைக் கால்வாயின் குறுக்கே 2 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீளக்கட்டப்பட்ட பாலம்; மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், சௌதார்பட்டி அணைக்கட்டிலிருந்து திரளி அணைக்கட்டு வரை 2 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட கௌண்ட நதி புனரமைப்புத் திட்டம்;

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், விருப்பாட்சி கிராமத்தின் அருகே 1 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நங்காஞ்சியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணை மற்றும் ஆத்தூர் வட்டம், வேலக்கவுண்டன்பட்டி, சீவல்சரகு கிராமத்தின் அருகில் 1 கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடகனாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், தெற்கு கல்லிடைகுறிச்சி கிராமம், எலுமிச்சையாற்றின் குறுக்கே 1 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மருதன்குளம் பிரிவு வாய்க்கால் அருகே கட்டப்பட்டுள்ள படுகை அணை, நாங்குநேரி வட்டம், இராஜாக்கள்மங்கலம் கிராமத்தில் இராஜாக்கள்மங்கலம் அணைக்கட்டுக்கு கீழே நம்பியாற்றின் குறுக்கே 1 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை, வீரகேரளம்புதூர் வட்டம், சுரண்டை கிராமத்தில் சிற்றாறு இணையும் இடத்திற்கு அருகே 2 கோடியே 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அனுமன்நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணை மற்றும் வீரகேரளம்புதூர் வட்டம் அருந்தவபிராட்டி

அணைக்கட்டுக்கு கீழே சுரண்டை கிராமத்தில் அனுமன் நதியின் குறுக்கே 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், சேந்தமங்கலம் கிராமம், முக்காணியில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே 25 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை மற்றும் கோவில்பட்டி வட்டம், ஆவுடையம்மாள்புரம் கிராமத்தில், உப்போடை ஆற்றின் குறுக்கே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், நல்லி கிராமம் (சுவாமி நத்தம் கிராமம் அருகில்) உப்போடை ஆற்றின் குறுக்கே 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், குருந்தம்பட்டு கிராமம், எஸ்.ஆர். பட்டணம் கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்கு பாசன வசதி அளிக்கும் பொருட்டு மணிமுத்தாற்றின் குறுக்கே 6 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அணைக்கட்டு மற்றும் சிங்கம்புணரி வட்டம், காளாப்பூர் கிராமம், பாலாற்றின் குறுக்கே 2 கோடியே 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், மண்டைகாடுபுதூர் கிராமத்தில் 7 கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தூண்டில் வளைவு;

சென்னை மாவட்டம் – சைதாப்பேட்டை வட்டம், தாடண்டர் நகரில் ‘‘A” மற்றும் “B” பிரிவு அரசு அலுவலர்களுக்காக 76 கோடியே 39 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு கட்டடம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தில் 2 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு விருந்தினர் மாளிகை;

என மொத்தம் 217 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொதுப்பணித் துறையின் நீர்வள திட்டங்கள் மற்றும் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாடுத் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா

வைத்தியநாதன், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., நீர்வள ஆதாரத் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு. ப்பி. ஜெயராம், பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு. எம். இராஜமோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**